மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோயில்களுக்குத்தான், இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 300 கோடி ரூபாயை அரசு நிதியாக வழங்கியிருக்கின்றார்கள். அவர் கோரிய அந்த ஊஞ்சல் மண்டபத்தை ஆவணப்படுத்துகின்ற பணி தற்போது தொல்லியல் துறையால் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அந்தப் பணி முடிவுற்றவுடன் அந்த மண்டபத்தை சீரமைத்துத் தருவதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய திருத்தேர் பணிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தங்கள் கோரப்பட இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய திருத்தேர் மற்றும் ஊஞ்சல் மண்டபங்கள் போன்ற பணிகள் நிச்சயமாக இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.

129—

தகவல் தொழில்நுட்பப் பூங்கா

***84245—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கடம்பை கிராமத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2024 ஜூன் 29]

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், கடம்பை கிராமத்தில் உள்ள 50 ஏக்கர் அரசு நிலத்தில் தற்போதைக்கு ஒரு ELCOT IT Park உருவாக்குவதற்கு அரசாங்கத்தில் எந்தத் திட்டமும் இல்லை. ஏனென்றால், சுமார் 160 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சென்னை சோழிங்கநல்லூரில் 377 ஏக்கர் பரப்பளவிலுள்ள ELCOSEZ பூங்காவில் சுமார் 68 ஆயிரம் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அதேபோல், 187 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஒசூரில் இருக்கிற ஒரு ELCOT IT Park-லும் பல நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. எனவே, தற்போது இங்கே ஒரு புதிய IT Park துவக்குவதற்கு எந்தத் திட்டமும் இல்லையென்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை தொகுதியில், TIDEL Park ஒன்று அமைப்பதற்கு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் அறிவிப்பை வெளியிட்டுள்ளதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய அமைச்சர் மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்களுக்கும், மாண்புமிகு முனைவர் டி.ஆர்.பி. ராஜா அவர்களுக்கும், எங்களுடைய அமைச்சர் மாண்புமிகு திரு. எ.வ. வேலு அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கீழ்பெண்ணாத்தூரிலிருந்து சென்னையும், ஒசூரும் அருகாமையில் இருக்கின்றன என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலில் கூறினார்கள். அங்கெல்லாம் இடம் கிடைப்பது கடினமாக இருக்கும். ஆனால் எங்களுடைய பகுதியில் 140 ஏக்கர் பரப்பளவில் அரசு புறம்போக்கு நிலம் இருக்கிறது. ஆகவே, இதுபோன்ற இடங்கள் இருக்கக்கூடிய அந்தப் பகுதியில் கட்டினால், தொடர்ந்து வளர்ச்சி அடைவதற்கு வாய்ப்பாக இருக்கும். இதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.

[2024 ஜூன் 29

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் கிடைப்பது கடினமானதுதான், உண்மை. அது இருப்பது நன்மைதான். அதற்குமேல் நான் பலமுறை கூறியதைப்போல், IT துறைதான் மிகவும் குறுகிய நேரத்தில், குறுகிய செலவில் வேலையை உருவாக்கக்கூடிய துறை. ஏனென்றால், internet connectivity-ம் சுமார் 100 சதுர அடி இடமும் இருந்தால் ஒரு வேலையை உருவாக்க முடியும். ஆனாலும், நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்பதான் எங்களால் பணி செய்ய முடியும். நான் சில புள்ளிவிவரங்களைச் சுட்டிக் காட்டுகிறேன். ஏனென்றால், நேற்று வெட்டுத் தீர்மானங்களிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது வைத்த கோரிக்கைகளிலும் சுமார் 25, 30 இடங்களில் IT Park உருவாக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் வந்திருக்கின்றன. ஆனால், இந்த நிதியாண்டிற்கு IT துறைக்கு மொத்த நிதி ஒதுக்கீடு 119 கோடி ரூபாய். இந்த நிதி ஒதுக்கீட்டை பல்வேறு துறைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், of course, பள்ளிக் கல்வித் துறையை எடுத்துக்கொண்டால் 30,000 கோடி ரூபாய், 35,000 கோடி ரூபாய், தொழில் துறையை எடுத்துக்கொண்டால் சில ஆயிரம் கோடி ரூபாய், ஏன் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையை எடுத்துக்கொண்டால்கூட ஏறத்தாழ 600 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இருக்கின்ற சூழ்நிலையில், 100 கோடி ரூபாய் ஆண்டுக்கு IT துறைக்கு ஒதுக்கீடு செய்யும்போது ஓரளவுக்குத்தான் எங்களால் செயல்படுத்த முடியும்.

அதற்குமேல் இன்னொன்றையும் கூறுகிறேன். நம்முடைய இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை மொத்த ஒதுக்கீடு 4 இலட்சத்து 59 ஆயிரம் கோடி ரூபாய். இதை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், கர்நாடகா மாநிலத்தில் 4 இலட்சத்துக்கு குறைவாக இருக்கும், தெலுங்கானா மாநிலத்தில் 3 இலட்சத்துக்கு குறைவாக இருக்கும். ஆனால், கர்நாடகா மாநிலம், ஓர் ஆண்டுக்கு IT துறைக்கு ஒதுக்கீடு செய்த நிதி 750 கோடி ரூபாய். தெலுங்கானா மாநிலம் 776 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. அந்த மாநிலங்களில் ஒதுக்கப்பட்ட தொகையில் சிறிய சதவிகிதத்தை நாம் ஒதுக்கியும்கூட, இந்தத் துறை இங்கு சிறப்பாகச் செயல்படுகிறது என்றால், அது மனிதவள திறனின் வெளிப்பாடு, தமிழ்நாட்டைவிட வேறு எந்த மாநிலத்திலும் இந்த அளவுக்கு IT திறமையும், இளைஞர்களும் இல்லை என்பதனால் இந்த அளவிற்கு இருக்கிறோம். இன்னும் சில திருத்தங்கள் மேற்கொள்ள இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடுத்த கேள்வி கேட்டவுடன் அவருக்கு நான் அந்த பதிலைக் கூறுகிறேன்.

2024 ஜூன் 29]

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: இப்போது தெரிகிறதா முனைவர் பழனிவேல் தியாக ராஜனுக்கு? உங்களிடம் நிதி கேட்கும்போது நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்போம் என்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின்கீழ் பதிவு செய்யும்போதும், அரசாங்கத்தில் வேலைவாய்ப்புகளுக்காக விண்ணப்பிக்கும்போதும், ஒரேநேரத்தில் எல்லோரும் போய் அணுகும்போது, net connection (Internet Connection) கிடைப்பதில் பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே, அனைத்து இடங்களிலும் 5G net connection கொண்டு வந்தால்தான், அந்தப் பணிகள் நன்றாக நடைபெறும். அதையும் நம்முடைய அரசு கவனிக்குமா? அதேபோன்று, software ஏற்றுமதியில் தற்போது தமிழகம் இந்தியாவில் எந்த இடத்தில் இருக்கிறது? எவ்வளவு மதிப்புள்ள softwares ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன என்ற விவரத்தையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கேள்விக்குப் பதிலளிப்பதற்கு முன்பு, மாண்புமிகு அருமை அண்ணன், அவை முன்னவர் அவர்களுக்கு நான் கூற வேண்டியது என்னவெனில், அன்றைக்கு நான் நிதியமைச்சராக இருந்தபோதும் இந்தத் துறைக்கு இதே அளவிற்குத்தான் நிதியை ஒதுக்கித் தந்தோம். நான் இருந்தபோது அதிகமாக இருந்தது; இப்போது குறைவாக இருக்கிறது என்றெல்லாம் நான் கூறவில்லை. யார் நிதியமைச்சராக இருந்தாலும், ஒவ்வோராண்டும் பல ஆயிரம் கோடி ரூபாயை

அவர் துறைக்கு ஒதுக்கிக் கொண்டேயிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது உட்கட்டமைப்பு. ஏற்கெனவே, எல்லா இடங்களிலும் TANFINET மூலம் fibre cable போடுவதாகக் கூறியிருக்கிறோம். அதேபோன்று சொல்கிறார்கள், STPI (Software Technology Parks of India) போன்ற software experts வெளியிடும் தகவல்களின்மூலம் ஒன்றிய அளவில் நமக்கு இருக்கிற பங்கு தெளிவாகிறது. ஆனால், No.1 இடத்தில் நாம் இல்லை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு காலத்தில் No.1 இடத்தில் இருந்தோம். இத்தனை கேள்விகள் இதே தலைப்பில் வந்ததனால், மேலும், ஒரு நிமிடம் நான் பதில் கூற விரும்புகிறேன். விளைவை மாற்ற வேண்டும் என்றால், எந்த நோக்கத்திற்காகச் சென்று கொண்டிருக்கிறோமோ, அதன் செயல்முறையை மாற்றினால்தான், விளைவை மாற்ற முடியும். என்னைப் பொறுத்தவரையில் நிதிக்கு மூன்றாவது முக்கியத்துவம்தான். முதல் முக்கியத்துவம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆதரவும், ஊக்கமும் இருந்தால், அதை வைத்து எதை வேண்டுமானாலும் செய்யலாம். அதனால்தான் சொல்கிறேன்; இரண்டு ஆண்டுகள் நிதியமைச்சராக இருந்தபோது, 20 ஆண்டுகளில் செய்யாத மாற்றத்தை இரண்டு ஆண்டுகளில் செய்தேன் என்று கூறுவேன். அதே நம்பிக்கை எனக்கு இப்போதும் இருக்கிறது. இன்னும் ஓராண்டு IT துறையில் இருந்தால், ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிற பல மாற்றங்களுக்குட்பட்டு, கூடுதல் செயல்முறையைக் கொண்டு இன்னும் ஓராண்டில், இதுவரையிலும் இல்லாத அளவில், 20 ஆண்டுகள் பின்தங்கியிருந்த நிலையை சீர்திருத்தும் வகையில், சிறப்பான பணிகளைச் செய்வோம் என்று கூறிக்கொள்கிறேன்.

ஒன்றிரண்டு projects-ஐ PPP (Public Private Partnership) model-ல் செயல்படுத்திக் காண்பித்துவிட்டால், அதற்குப் பிறகு இங்கு எத்தனையோ வாய்ப்புகள் இருக்கின்றன. மீண்டும் சொல்கிறேன், இங்கே மட்டுமல்ல, வெளிநாட்டில் இருக்கிற குறிப்பாக Bay Area (San Francisco Bay Area), Silicon Valley என்று கூறப்படுகின்ற innovation hub, IT industries-ல் innovation hub-ல் இருக்கிற, திறமையில் முதலிடம் பெற்றிருப்பவர்கள் தமிழர்கள். நான், அடுத்த வாரம் அங்கே செல்கிறேன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்பேரில், FeTNA (Federation of Tamil Sangams of North America) நான் 15 ஆண்டுகளுக்குப்

2024 ஜூன் 29]

பிறகு செல்கிறேன். விடுமுறை வாரமாக இருந்தாலும், இரண்டு நாட்களில் என்னைப் பார்ப்பதற்கு 100 தமிழர்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள். அந்தளவிற்குத் தமிழ்ப்பற்று உள்ளவர்கள், வரலாறுமீது ஆர்வம் உள்ளவர்கள் அங்கு இருக்கிறார்கள். அதனால், நிதியை ஒரு பொருட்டாகக் கருதாமல், வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே சென்ற ஆண்டு 100 சதவிகிதம் அதிகமான IT space*-ஐ ஏற்படுத்தினோம். அதில்,* TANFINET *ஒரு பங்கு;* PPP model *ஒரு பங்கு; முதலீட்டாளர்கள் நிதி ஒரு பங்கு என இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து, இன்னும் ஓராண்டில் வளர்ச்சியை மேம்படுத்தி இந்தத் துறையைச் சிறப்பிப்போம் என்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மற்ற மாநிலங்களைவிட நிதி ஒதுக்கீடு குறைவாக இருந்தாலும், நம் மாநிலத்தில் கட்டமைப்பை மிக அதிகமாக உருவாக்கியிருக்கிறோம். பல ஆயிரம் கோடி ரூபாய் செலவில் தனியார் நிறுவனங்கள்மூலம் இங்கு கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை உருவாக்கியதால், அந்த வாய்ப்பு நமக்கு ஏற்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

வினா வரிசை எண் 130, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. *பாலாஜி, மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–35

130—

அடக்கஸ்தலம்

***94458—திரு. S.S. பாலாஜி:**

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, மாம்பாக்கம் எல்லைக்குட்பட்ட பகுதியில் இஸ்லாமியர்களுக்கான அடக்கஸ்தலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?